தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.023458/இ1/2014, நாள் 06.08.2014
ஸ்ரீ ஜய வருடம் ஆடி மாதம் 21ம் நாள் திருவள்ளுவர் ஆண்டு 2045

----

பொருள் – தொடக்கக்கல்வி – ஊராட்சி ஒன்றியம் /நகராட்சி/அரசுதொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் – துறை முன் அனுமதி பெற்று/ பெறாமல் உயர் கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதியம் கோரும் நேர்வுகள் குறித்து அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

-----

உயர்கல்வி பயில்வதற்கு துறையின் முன் அனுமதி பெற்று உயர்கல்வி பயின்றவர்களுக்கு மட்டுமே விதிகளின்படியும், உரிய அரசாணைகளின்படியும் உயர்கல்விக்கான ஊக்க ஊதியம் (Incentive) வழங்கலாம் என அறிவிக்கப்படுகிறது. துறையின் முன் அனுமதி பெறாமல் உயர்கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதியம் கோரும் நேர்வுகளில் ஊக்க ஊதியம் (Incentive) அனுமதிக்கக்கூடாது எனவும் அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நிகழ்வுகளில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டாலோ, புகார்கள் ஏதேனும் பெறப்பட்டாலோ அந்நிகழ்விற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பாவார்கள் எனவும், சார்ந்தவர்கள் மீது உரிய துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தொடக்கக்கல்வி இயக்குநர்.

பெறுநர்
அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள்.

E:\e drive\Other Sec\Other Sec 2014\E .docx